கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 136/2020

வாதி தரப்பு சாட்சி-1 இரவிசந்திரன் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்தின் முழுவிவரமும் எனது தகப்பனாருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். சொசைட்டியில் கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதற்கு முன்பே நான் வீடு கட்டிவிட்டேன் என்று சொல்லியுள்ளென் என்றால் சரிதான். சொசைட்டியுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வீடு கட்டியுள்ளேன். சொசைட்டி எத்தனை சதுரடி நிலத்திற்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் நியாபகம் இல்லை. சொரைசட்டியில் எனக்கு எழுதி கொடுத்த நிலத்திற்கு மட்டும் தான் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். சொசைட்டி எழுதி கொடுத்த அளவுகளை விட கூடுதலான அளவுகளுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பட்டாவும், நகராட்சி யில் அனுமதியும் தாவா சொத்திற்கு கொடுத்துள்ளார்கள்.

2. சொசைட்டியில் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் உள்ள அளவை விட அதிகமாக நிலத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் ஆமாம். மேற்படி அதிகமான இடம் என சொல்வது யாருடையது என்றால் பொதுப்பணிதுறையின் நிலம் ஆகும். எனது வழக்குரையில் அதிகமான உள்ள இடம் பொதுப்பணிதுறைக்கு சொந்தமானது என சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. சொசைட்டிக்கும் எனக்கும் எந்த பிரச்சனை என்றால் சொசைட்டியில் பாக்கி இடம் உள்ளது. அதற்கு தொகை செலுத்தினால் அதையும் பத்திரம் எழுதி தருவதாக சொன்னார்கள். எப்போது சொன்னார்கள் என்றால் அவர்கள் அறிவிப்பு அனுப்பினார்கள். அதற்கு எனது தகப்பனார் தொகை செலுத்திவிட்டார். எவ்வளவு தொகை செலுத்தினார் ரூ.70000/- செலுத்தினார்.

3. அதற்கு இரசீது உள்ளதா என்றால் உள்ளது. நான் சொரைசட்டியில் கூடுதலான இடத்திற்கு தொகை செலுத்திவிட்டதாகவும், அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி கூடுதலாக

இடத்திற்கு செலுத்திய தொகை திருப்பி கொடுத்துவிட்டார்கள். எதற்காக சொசைட்டி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அனுபவத்தில் இருந்த மரத்தையும், வேலியையும் வெட்ட வந்தார்கள் அதற்காக வழக்கு தாக்கல் செய்தேன். 12.12.1983 ல் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் Block No.D 29 என்ற பகுதியை 3088 சதுரடி நிலத்திற்கு தான் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேற்படி நிலத்திற்கு வடக்கு, தெற்கு, கிழக்கு மூன்று புறமும ரோடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வேலியை அகற்ற வந்த தேதி வருடம் மாதம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு சில நாட்கள் முன்பு. எனது தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்த இடத்திற்கு மேற்குபுறம் 1ம் பிரதிவாதி சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் மேற்படி சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு மேற்குபுறம் தரிசு புறம்போக்கு உள்ளதாகவும், அது எங்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சங்கத்திடமிருந்து குறிப்பிட்ட அளவு நிலத்திற்கு கிரையம் பெற்றுவிட்டு 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 05.9.2013 ல் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி சங்கத்திற்கு ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

5. மேற்படி உறுதிமொழி பத்திரத்தில் D29 மனையை ஒட்டி உள்ள ஒழுக்கற்ற காலிமனையை 1ம் பிரதிவாதி சங்கம் கையகப்படுத்தி கொள்வதில் அவருக்கு ஆட்சேபனை இல்லை என எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தின் படி எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு மேற்குபுறம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பதும், அதில் எனது தகப்பனாருக்கு உரிமை இல்லை என்பதும் எனது தகப்பனாருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரைய பத்திரத்தில் உள்ள முழுமையான விவரங்களை நகராட்சிக்கு தெரிவிக்காமல் தவறான சங்கதிகளை கூறி நகராட்சியில் ஆவணங்கள் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

6. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு மேற்படி விவரம் தெரியவந்ததால் அது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் உரிய முறையில் அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்த சமய்ததில் எங்கள் அனுபவம் குறித்து தெரிந்துவிடும் என்பதால் அவசரகதியில்

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கைவசம் உள்ள நிலம் தரிசு புறம் போக்கு என சொல்லியுள்ளதால் வருவாய் துறையினர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவீடு தவிர அதிகாமான நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு கேட்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்தின் விஸ்தீரணத்தை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்ச ரியல்ல. தாவா ஆ பட்டியல் சொத்தின் அளவுகளானது கற்பனையாக நாங்களே அளவுகள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் தாவா சொத்தின் அளவுகளை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை உரிமையே இல்லாமல் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**